**அக்டோபர் – 04**

# TNPSC துளிகள்

- 2026 ஆம் ஆண்டு செப்டம்பர் 28 அன்று ஃபாஸ்டேக் (FASTag) வருடாந்திர பாஸ் / பயணச் சீட்டானது ஒரு கோடி வழங்கப்பட்ட பாஸ்களைக் கடந்துள்ளது, மேலும் இது முறையான ஃபாஸ்டேக் கொண்ட தனியார், வணிக நோக்கமற்ற வாகனங்களுக்கு மட்டுமே கிடைக்கிறது, இது ராஜ்மார்க் யாத்ரா செயலி அல்லது இந்திய தேசிய நெடுஞ்சாலைகள் ஆணைய (NHAI) வலைத்தளத்தின் மூலம் செயல்படுத்தப்படுகிறது.
    - இந்த பாஸ்/பயணச்சீட்டானது 2025 ஆம் ஆண்டு ஆகஸ்ட் 15 அன்று சாலைப் போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சகம் மற்றும் இந்திய தேசிய நெடுஞ்சாலைகள் ஆணையத்தால் (NHAI) தொடங்கப்பட்டது.
- ஜார்க்கண்டின் பாரம்பரிய நாட்டுப்புற தாள வாத்தியமான மந்தருக்கு (Mandar) சென்னையில் உள்ள புவிசார் குறியீட்டுப் பதிவேட்டில் இருந்து புவிசார் குறியீடு (Geographical Indication - GI) வழங்கப்பட்டுள்ளது.
    - மந்தர் என்பது இரு முனைகளிலும் வெவ்வேறு அளவிலான தோல் மூடிய திறப்புகளைக் கொண்ட உருளை வடிவ செம்மண் நிற பாகத்தைக் கொண்டுள்ளதுடன், மேலும் இது ஜார்க்கண்டின் பழங்குடி மற்றும் நாட்டுப்புற இசையில் பயன்படுத்தப் படுகிறது.
- தெற்கு இந்தியப் பெருங்கடலில் உள்ள கெர்குலன் தீவுகளில் இருந்து பைகோசெலிஸ் கெர்குலென்சிஸ் (Pygoscelis kerguelensis) என்ற புதிய ஜென்டூ பென்குயின் இனத்தை ஆராய்ச்சியாளர்கள் அடையாளம் கண்டுள்ளனர், இது 100 ஆண்டுகளுக்கும் மேலாக அங்கீகரிக்கப்பட்ட முதல் புதிய பென்குயின் இனமாகும்.
- பட்சர் தீவு (Butcher Island) என்றும் அழைக்கப்படும் மும்பையில் உள்ள ஜவகர் தீவுக் கடல் எண்ணெய் முனையம், இந்தியாவின் முதல் நெகிழி இல்லாத எண்ணெய் முனையமாக அறிவிக்கப்பட்டது.
- 25 லட்சத்திற்கும் அதிகமான லில்லியம் மலர்களைக் கொண்ட உலகின் மிக உயரமான மலர் தோட்டம் என்று விவரிக்கப்படும் சோக்லாம்சரின் 10,600 அடி (3,265 மீ) உயர மலர் தோட்டத்தில் வளர்க்கப்பட்ட 15,000 A-கிரேடு லில்லியம் தண்டுகளின் முதல் தொகுதியை லடாக், லேவில் உள்ள KBR விமான நிலையத்திலிருந்து இந்தியாவின் முக்கிய சந்தைகளுக்கு அனுப்பியுள்ளது.
- வனவிலங்குகள் மற்றும் அவற்றின் வாழ்விடங்கள் பற்றிய விழிப்புணர்வு மற்றும் பாதுகாப்பை மேம்படுத்துவதற்காக இந்தியாவில் ஆண்டுதோறும் வனவிலங்கு வாரம் கொண்டாடப்படுகிறது, மேலும் இது முதன்முதலில் 1952 ஆம் ஆண்டில் தொடங்கப் பட்டது.
    - 2026 ஆம் ஆண்டிற்கான கருத்துரு Connecting Habitats and Thriving Wildlife என்பதாகும்.

# தமிழ்நாட்டுச் செய்திகள்

## வெற்றிப் பயணம் திட்டம் - தமிழ்நாடு

- தமிழ்நாடு முதலமைச்சர் 2026 ஆம் ஆண்டு அக்டோபர் 2 அன்று சென்னையில் உள்ள கோயம்பேட்டில் விரிவாக்கப்பட்ட வெற்றிப் பயணம் திட்டத்தைத் தொடங்கி வைத்தார் என்ற நிலையில் இதன் மூலம் பெண்கள் மற்றும் திருநங்கைகளுக்கான கட்டணமில்லாப் பேருந்துப் பயணம் விரிவுபடுத்தப்பட்டுள்ளது.
- இத்திட்டம் 2021 ஆம் ஆண்டு மே மாதத்தில் அறிமுகப்படுத்தப்பட்ட முந்தைய மகளிர்

விடியல் பயணம் திட்டத்தை விரிவுபடுத்துகிறது.

- இந்த விரிவாக்கமானது, முன்பு உள்ளடக்கப்பட்ட சாதாரண பேருந்து சேவைகளுடன் கூடுதலாக, 40 கி.மீ தூரத்திற்கு அப்பால் உள்ள விரைவு, சொகுசு, புறநகர் சாதாரண மற்றும் மலைவாழ் சாதாரணப் பேருந்துகள், குறைந்த நிறுத்தங்களைக் கொண்ட சேவைகள் (LSS) ஆகியவற்றை உள்ளடக்கியது.
- விரிவாக்கப்பட்ட இத்திட்டத்திலிருந்து அரசு விரைவுப் போக்குவரத்துக் கழகப் (SETC) பேருந்துகள் விலக்கப்பட்டுள்ளன.
- ஏழு மாநிலப் போக்குவரத்துக் கழகங்களால் இயக்கப்படும் திட்டமிடப்பட்ட பேருந்துகளில் கிட்டத்தட்ட 69% அளவிலான சுமார் 12,692 அரசுப் பேருந்துகளை இத்திட்டம் உள்ளடக்கியது.
- இலவசப் பயணங்களைப் பதிவு செய்ய மின்னணு பயணச்சீட்டு இயந்திரம் (ETM) அமைப்புகள் ஒருங்கிணைக்கப்பட்டன; இதன் சோதனை ஓட்டங்கள் 2026 ஆம் ஆண்டு செப்டம்பர் 27 அன்று நடத்தப்பட்டன.




## மேடவாக்கத்தில் சோழர் காலக் கல்வெட்டு




- சென்னையை அடுத்த மேடவாக்கத்தில் உள்ள நல்ல தண்ணீர் குளத்தை சீரமைத்து தூர் வாரும் பணியின் போது 13 ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த சோழர் கால கல்வெட்டு

கண்டுபிடிக்கப்பட்டது.

- இந்தக் கல்வெட்டானது காஞ்சிபுரத்தை ஆட்சி செய்த தெலுங்குச் சோழ மன்னரான விஜய கண்ட கோபாலன் ஆட்சியின் போது பொ.ஆ. 1268 ஆம் ஆண்டைச் சேர்ந்தது .
- பண்டைய மோனப்பாக்கம் ஏரியில் மோனப்பாக்கத்தைச் சேர்ந்த வியாபாரி ஒருவர் மதகு அமைத்ததை இது பதிவு செய்துள்ளது.
- மோனப்பாக்கம் பின்னர் மோடவாக்கம் என்று அழைக்கப்பட்டது, இது அப்பகுதியின் பெயரின் வரலாற்றுப் பரிணாமத்தைக் குறிக்கிறது.
- இன்றைய சென்னையைச் சுற்றியுள்ள பண்டைய நீர்நிலைகள் விவசாயம் மற்றும் குடிநீர் தேவைகளுக்காக மேம்படுத்தப்பட்டதை கல்வெட்டு காட்டுகிறது.
- சுமார் மூன்று தசாப்தங்களுக்கு முன்பு வரை நல்ல தண்ணீர் குளம் உள்ளூர்வாசிகளுக்கு குடிநீர் ஆதாரமாக இருந்ததாக கூறப்படுகிறது.

# தேசியச் செய்திகள்

## முதல் பெண் விவசாயத் தொழிலாளர் மாநாடு

- விவசாயம் மற்றும் கிராமப்புற வாழ்வாதாரங்களில் பெண்களின் பங்களிப்பை அங்கீகரிப்பதற்காக இந்தியாவின் முதல் பெண் விவசாயத் தொழிலாளர் மாநாடு புது தில்லியில் நடைபெற்றது.
- 2026 ஆம் ஆண்டிற்கான ஐக்கிய நாடுகள் சபையின் (UN) சர்வதேச பெண் விவசாயிகள் ஆண்டின் போது, பாரதிய கிசான் சங்கம் (BKS) இந்த மாநாட்டை ஏற்பாடு செய்தது.
- பெண்களை விவசாயிகளாக அங்கீகரிப்பதிலும், நில உரிமைகள், நிறுவனக் கடன், விவசாயக் கருவிகள் மற்றும் சந்தை அணுகல் போன்ற பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதிலும் இது கவனம் செலுத்தியது.
- இயற்கை விவசாயம், நாட்டு விதைப் பாதுகாப்பு, கால்நடை வளர்ப்பு மற்றும் உணவுப் பதப்படுத்துதல் ஆகியவற்றில் சாதனை படைத்த பெண் விவசாயிகளுக்கு தேசிய விருதுகள் வழங்கப்பட்டன.




## பிரகதி-50 முன்னெடுப்பு

- தூய்மை இந்தியா திட்டம்-நகர்ப்புறம் 2.0 (Swachh Bharat Mission–Urban 2.0) திட்டத்தின் கீழ் 24 மாநிலங்களில் உள்ள 50 மாதிரி நகரங்களை உருவாக்குவதற்காக பிரகதி-50

(PRAGATI-50) என்ற முன்னெடுப்பு 2026 ஆம் ஆண்டு செப்டம்பர் 29 அன்று புது தில்லியில் தொடங்கப்பட்டது.

- பிரகதி-50 என்பது முக்கிய செயல்பாட்டுக் காட்டி (KPI) அடிப்படையிலான கண்காணிப்பின் மூலம் நகர்ப்புற தூய்மை, திடக்கழிவு மேலாண்மை, பயன்படுத்தப் பட்ட நீர் மேலாண்மை, சுகாதாரம் மற்றும் குடிமக்கள் பங்கேற்பை மேம்படுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- தேர்ந்தெடுக்கப்பட்ட நகரங்களில் தலைநகரங்கள், கலாச்சார மையங்கள், புனிதத் தலங்கள், சுற்றுலா மையங்கள் மற்றும் பொருளாதார மையங்கள் ஆகியவை அடங்கும், இவை மற்ற நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளுக்கு தூய்மையான முன்மாதிரியாகச் செயல்படுகின்றன.
- வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற விவகாரங்கள் அமைச்சகம் (MoHUA) இந்த முன்னெடுப்பைச் செயல்படுத்தும், மேலும் மத்திய அமைச்சர் தலைமையில் இரண்டு மாதங்களுக்கு ஒருமுறை ஆய்வுக் கூட்டங்கள் நடைபெறும்.
- உத்தரப் பிரதேசத்தில் இருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட ஆறு நகரங்கள் ஆக்ரா, அயோத்தி, லக்னோ, மதுரா-பிருந்தாவனம், பிரயாக்ராஜ் மற்றும் வாரணாசி ஆகியவையாகும்.




# அறிவியல் மற்றும் தொழில்நுட்பச் செய்திகள்

## ஆகாஷ் வான் பாதுகாப்பு அமைப்பு ஏற்றுமதி

- இந்தியா 2026 ஆம் ஆண்டு அக்டோபர் 1 நிலவரப்படி தஜிகிஸ்தான் மற்றும் துர்க்மெனிஸ்தான் ஆகிய நாடுகளுக்கு ஆகாஷ் வான் பாதுகாப்பு அமைப்பை ஏற்றுமதி செய்துள்ளது.
- ஆகாஷ் என்பது பாதுகாப்பு ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு நிறுவனத்தால் (DRDO) உள்நாட்டிலேயே உருவாக்கப்பட்ட குறுகிய முதல் நடுத்தர தூர எறிகணை அமைப்பாகும், இது தரையிலிருந்து வானில் உள்ள இலக்கைத் தாக்கும் திறன் கொண்டது.
- இது பாரத் டைனமிக்ஸ் லிமிடெட் (BDL) மற்றும் பாரத் எலக்ட்ரானிக்ஸ் லிமிடெட் (BEL) ஆகியவற்றால் தயாரிக்கப்படுகிறது.
- ஆகாஷ் அமைப்பைப் பெற்ற முதல் வெளிநாட்டு வாடிக்கையாளர் அர்மேனியா ஆகும்.

- இந்த அமைப்பு போர் விமானங்கள், சீர்வேக எறிகணைகள், வழிகாட்டப்பட்ட வெடிமருந்துகள் மற்றும் ஆளில்லா வான்வழி வாகனங்களை (UAVs) தாக்கக் கூடியது.




## சுற்றுச்சூழல் செய்திகள்

### ராஜஸ்தானில் கானமயில் பாதுகாப்பு




- ராஜஸ்தானின் ஜெய்சல்மரில் உள்ள பாலைவன தேசியப் பூங்காவில், முதல் முறையாக கூண்டில் வளர்க்கப்பட்ட கானமயில் (GIB) குஞ்சுகள் காடுகளில் விடப்பட உள்ளன.
- இதன் IUCN நிலை மிக அருகி வரும் இனம் மற்றும் அறிவியல் பெயர் ஆர்டியோடிஸ் நிக்ரிசெப்ஸ் (Ardeotis nigriceps) ஆகும்.
- 2013 ஆம் ஆண்டில் தொடங்கப்பட்ட கானமயில் திட்டம் (Project GIB), ஜெய்சல்மரின் சாம் மற்றும் ராம்தேவ்ராவில் உள்ள பாதுகாப்பு மையங்களில் குறைந்தது 98 கானமயில்களை இனப்பெருக்கம் செய்துள்ளது.

- காடுகளில் இவற்றின் எண்ணிக்கை 120-150 பறவைகள் மட்டுமே என்று மதிப்பிடப் பட்டுள்ளது, இதில் சுமார் 130 ± 20 பறவைகள் ராஜஸ்தானில் உள்ளன.
- வாழ்விட இழப்பு, வேட்டையாடுதல் மற்றும் மின் கம்பிகளில் மோதுதல் ஆகியவை இதற்கு ஏற்படும் முக்கிய அச்சுறுத்தல்களாகும்.
- கானமயில்கள் 1972 ஆம் ஆண்டின் வனவிலங்கு (பாதுகாப்பு) சட்டத்தின் அட்டவணை I-இன் கீழ் பாதுகாக்கப்படுகிறது, மேலும் இது 1-2 ஆண்டுகளுக்கு ஒருமுறை முட்டையிடும் மெதுவான இனப்பெருக்க விகிதத்தைக் கொண்டுள்ளது.

# மாநிலச் செய்திகள்

## முதல் பனிப்பாறை ஏரி முன்னெச்சரிக்கை அமைப்பு - உத்தரகாண்ட்

- உத்தரகாண்ட் மாநிலம் சமோலி மாவட்டத்தில் உள்ள வசுந்தரா தாலில் தனது முதல் பனிப்பாறை ஏரி முன்னெச்சரிக்கை அமைப்பை நிறுவத் தொடங்கியுள்ளது.
- இந்த அமைப்பு நீர் மட்டம், வானிலை, பனியின் ஆழம், தரை நகர்வு, மேற்பரப்பு வெப்பநிலை மற்றும் நீர் ஓட்டம் ஆகியவற்றை கண்காணிக்கும்.
- உத்தரகாண்ட் மாநிலம் ரூர்க்கியில் உள்ள மத்திய கட்டிட ஆராய்ச்சி நிறுவனத்தின் (CBRI) ஆதரவுடன் வாடியா இமயமலை புவியியல் நிறுவனம் தலைமையிலான 22 அறிவியலாளர்கள் கொண்ட குழு இந்த அமைப்பை நிறுவி வருகிறது.
- தேசியத் தொலை உணர்வு மையம் (NRSC) 2023 ஆம் ஆண்டில் உத்தரகாண்டில் 344 பனிப்பாறை ஏரிகளை அடையாளம் கண்டுள்ளது, இதில் 13 ஏரிகள் அதிக ஆபத்து உள்ளவையாக தேசியப் பேரிடர் மேலாண்மை ஆணையத்தால் (NDMA) வகைப்படுத்தப் பட்டுள்ளன.
- பனிப்பாறை ஏரி வெடிப்பு வெள்ளத்திற்கு (GLOFs) எதிரான முன்னெச்சரிக்கையை வழங்குவதை இந்த அமைப்பு நோக்கமாகக் கொண்டுள்ளது.




## லடாக் வரைபட தரப்படுத்தல்

- இந்திய அரசு தனது அதிகாரப்பூர்வ சர்வே ஆஃப் இந்தியா வரைபடத்தில் லடாக்கில்

உள்ள 28 புவியியல் அம்சங்களின் பெயர்களை தரப்படுத்தியுள்ளது.

- இந்தப் பட்டியலில் 11 சிகரங்கள், 5 மலைகள், 6 நிலப் பகுதிகள், 2 பனிப்பாறைகள், 2 கணவாய்கள், 1 பள்ளத்தாக்கு, 1 நதி, 1 ஏரி மற்றும் 1 பிற நீர்நிலைகள் ஆகியவை அடங்கும்.
- புதிதாக தரப்படுத்தப்பட்ட அம்சங்களில் அதிஷா கிரி, கனிஷ்கா சிகரம், ஜோராவர் சிகரம், சிவா ரி, கருண் பிர், டிராக் கார்போ மற்றும் ஜோல்மோரி ஆகியவை அடங்கும்.
- பார்பிக் மற்றும் ஸ்காம்ரி ஆகியவை பனிப்பாறைகளாகவும், சாப்சிங்கல் கணவாய் மற்றும் சாச்மிர்க் கணவாய் ஆகியவை கணவாய்களாகவும் அடையாளம் காணப் பட்டன.
- ஸ்கோர்கா பள்ளத்தாக்கு, யாங்பா நதி, குரு ரின்போச்சே ஏரி மற்றும் வெந்நீர் ஊற்று ஆகியவை பிற அம்சங்களில் அடங்கும்.




## பிரபலமானவர்கள், விருதுகள், மற்றும் நிகழ்வுகள்

### 2026 Ig நோபல் பரிசுகள்




- அசாதாரண அறிவியல் ஆராய்ச்சிகளுக்காக 2026 ஆம் ஆண்டிற்கான Ig நோபல்

பரிசுகள் சுவிட்சர்லாந்தின் சூரிச்சில் வழங்கப்பட்டன.

- ❖ நோபல் பரிசுகளுக்கு நகைச்சுவையான இணையாக Ig நோபல் பரிசுகள் 1991 ஆம் ஆண்டில் மார்க் ஆபிரகாம்ஸ் என்பவரால் தொடங்கப்பட்டன.
- ❖ மூக்கைச் சிந்துவதின் காற்றியக்கவியல் மற்றும் அதன் ஆரோக்கிய விளைவுகளைப் பற்றி ஆய்வு செய்ததற்காக டோகுஜி உன்னோவிற்கு (இறப்பிற்குப் பின்) மருத்துவப் பிரிவிற்கான பரிசு வழங்கப்பட்டது.
- ❖ விஷப் பாம்புகள் மனிதர்களைக் கடிக்கச் செய்யும் காரணிகளைப் பற்றி ஆய்வு செய்ததற்காக ஜோவாவோ மிகுவல் ஆல்வ்ஸ்-நூன்ஸ் மற்றும் அவரது குழுவினருக்கு உயிரியல் பிரிவிற்கான பரிசு வழங்கப்பட்டது.
- ❖ குட்டி போடும் கரப்பான் பூச்சிகளின் அதிக ஆற்றல் கொண்ட பால் புரதங்களை ஆய்வு செய்ததற்காக, இந்திய ஆராய்ச்சியாளர்கள் உட்பட சஞ்சாரி பானர்ஜி, நாதன் கௌசென்ஸ் மற்றும் சக ஊழியர்களுக்கு வேதியியல் பிரிவிற்கான பரிசு வழங்கப் பட்டது.
- ❖ பொருளாதாரம், இயற்பியல், தொழில்நுட்பம், நுகர்தல், அமைதி மற்றும் மண் அறிவியல் ஆகிய துறைகளில் மேற்கொள்ளப்பட்ட ஆராய்ச்சிகளைப் பிற பரிசுகள் அங்கீகரித்தன.

# முக்கிய தினங்கள்

## சர்வதேச அகிம்சை தினம் 2026 - அக்டோபர் 02




- ❖ ஐக்கிய நாடுகள் பொதுச் சபை (UNGA) 2007 ஆம் ஆண்டில் ஒரு தீர்மானத்தின் மூலம் இந்த தினத்தை நிறுவியது.
- ❖ மோகன்தாஸ் கரம்சந்த் காந்தியின் பிறந்தநாளான காந்தி ஜெயந்தி தினத்தில் இந்த தினம் அனுசரிக்கப் படுகிறது.
- ❖ இந்த தினம் அமைதியான செயல், உரையாடல், சகிப்புத்தன்மை மற்றும் மோதல் தீர்வு ஆகியவற்றை ஊக்குவிக்கிறது.
- ❖ காந்தியின் அகிம்சை (வன்முறையற்ற) மற்றும் சத்யாகிரக (அறவழிப் போராட்டம்) தத்துவம் இந்த அனுசரிப்புடன் தொடர்புடையது.

- M.K காந்தி 1869 ஆம் ஆண்டு அக்டோபர் 2 அன்று குஜராத்தில் உள்ள போர்பந்தரில் பிறந்தார்.

# இதரச் செய்திகள்

## யுனெஸ்கோவின் தற்காலிகப் பட்டியலில் 5 புதிய இடங்கள்

- இந்தியாவின் யுனெஸ்கோ உலக பாரம்பரியத் தலங்களின் தற்காலிகப் பட்டியலில் ஐந்து புதிய இடங்கள் சேர்க்கப்பட்டுள்ளன, இதன் மூலம் மொத்த எண்ணிக்கை 78 ஆக உயர்ந்துள்ளது.
- பாக் குகை ஓவியங்கள், சம்பல் பள்ளத்தாக்கில் உள்ள கோயில்கள், உதயகிரி குகைகள், கின்னோர்கர் மற்றும் சத்தியாகிரகத் தளங்கள் ஆகியவையே சேர்க்கப் பட்ட ஐந்து இடங்களாகும்.
- முதல் நான்கு தளங்கள் மத்தியப் பிரதேசத்தில் உள்ளன, அதே சமயம் சத்தியாகிரக தளங்கள் என்பது இந்தியா-தென்னாப்பிரிக்கா நாடுகளுக்கிடையேயான ஒரு முன் மொழியப் பட்ட வரிசையான தளமாகும்.
- உதயகிரி குகைகளில் 20 குடைவரைக் குகைகள், சிற்பங்கள் மற்றும் குப்தர்கள் காலத்தைச் சேர்ந்த கல்வெட்டுகள் (4 ஆம் நூற்றாண்டின் பிற்பகுதி - 5 ஆம் நூற்றாண்டின் முற்பகுதி) காணப்படுகின்றன.
- பாக் குகைகள் என்பது மேற்கு மத்தியப் பிரதேசத்தில் உள்ள பாக்னி நதிக்கரையில் அமைந்துள்ள ஒன்பது பௌத்த குடைவரைக் குகைகளாகும், இவை சுவரோவியங்களுக்குப் பெயர் பெற்றவை.
- சத்தியாகிரக தளங்கள் மகாத்மா காந்தியின் சத்தியாகிரகத்தின் வளர்ச்சியைக் கண்டறியும் 9 கூறுகளை உள்ளடக்கியது - இதில் 2 தென்னாப்பிரிக்காவிலும் 7 இந்தியாவிலும் உள்ளன.




★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★